[*2019 ஜூலை 19*

கேட்டிருக்கின்ற கேள்வி, மூல வினாவிற்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், பணிமனை சம்பந்தமாகக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்தப் பணிமனையை நவீனப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) தேசிய மருத்துவ ஆணைய சட்ட மசோதா மற்றும் தேசிய EXIT தேர்வுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் மத்திய அமைச்சரவையிலே National Exit Test குறித்து ஓர் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அது குறித்து இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, சில விளக்கங்களை நான் பெற விரும்புகிறேன். தேசிய மருத்துவ ஆணையம் தொடர்பான புதிய மசோதா, மாநில உரிமைகளைப் பறிக்கக்கூடிய வகையிலே நேற்றைய முன்தினம் மத்திய அரசால் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மருத்துவக் கழகத்தின் உறுப்பினர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், தமிழகம் போன்ற அதிக மருத்துவக் கல்லூரிகள் இருக்கக்கூடிய மாநிலத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. தேசிய மருத்துவக் கழகத்திற்கு உறுப்பினர்கள் மற்றும் தலைவரைத் தெரிவு செய்யக்கூடிய Search

2019 ஜூலை 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

Committee-க்கும், மாநிலங்களுக்கும் எந்த அதிகாரமும் இல்லை. முன்பு வெளிவந்த மசோதாவில், M.B.B.S. முடித்த பிறகு National Exit Test வைத்திருந்தார்கள். தேசிய மருத்துவக் கழகத்தில் பதிவு செய்து மருத்துவராக பணிபுரிவதற்கு இது மிகவும் முக்கியம் என்றும் கூறியிருந்தார்கள். ஆனால், இப்போது M.B.B.S. படிப்பின் கடைசி வருடத்தில் மத்திய அரசு National Exit Test-ஐ நடத்தும் என்று கூறியிருப்பதால் மாநிலத்தில் இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளின் கட்டுப்பாட்டை முழுவதுமாக மத்திய அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவக் கல்லூரியில் படிப்பவர்களுக்கு இந்த National Exit Test-லிருந்து விலக்களிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது சென்னையிலிருக்கக்கூடிய Madras Medical College, Stanley Medical College போன்றவற்றை அவமதிக்கக்கூடிய போக்காக அமைந்திருக்கிறது. மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில்கூட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்லூரிகள் இல்லை என்று மத்திய அரசு கருதுவது, கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய ஆபத்தாக அமைந்திருக்கிறது. ஆகவே தேசிய மருத்துவ ஆணைய சட்ட மசோதாவை தமிழக அரசு கடுமையாக எதிர்க்க வேண்டும். மருத்துவக் கல்லூரிகள் நடத்துவது மாநிலங்களின் உரிமை என்பதை மத்திய அரசுக்கு நமது மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்று நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை இந்த தேசிய மருத்துவ ஆணைய சட்ட மசோதா குறித்து இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தில் இங்கே உள்ளவர்களுக்கும் மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை. அதே உணர்வோடுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் இருக்கிறது. குறிப்பாக இந்த மசோதாவை 2016 ஆம் ஆண்டில் கொண்டுவந்தபோதே, இந்த ஷரத்துகள் அனைத்தும் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாக இருக்கின்றன; தாங்கள் சொன்னதுபோல் கூட்டாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 19

இருக்கின்றன என்று இந்த மசோதாவிற்கு ஆரம்பமுதற்கொண்டே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மிகக் கடுமையாக பாராளுமன்றத்தில் தன்னுடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப் பதிவுசெய்ததோடு மட்டுமல்லாமல், பாராளுமன்றத்தில் இந்த மசோதா ஆய்விற்கு வந்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகக் கடுமையான எதிர்ப்பை அன்றைக்குத் தெரிவித்த காரணத்தினால், பாராளுமன்ற நிலைக் குழுவிற்கு இந்த மசோதா அனுப்பப்பட்டது. பாராளுமன்ற நிலைக் குழுவிற்கு அனுப்பப்பட்டபோதும் நம் தமிழ் மாநிலம் இதனைக் கடுமையாக எதிர்த்தது; நம்முடன் சேர்ந்து பிற மாநிலங்களும் எதிர்த்தன.

தாங்கள் சொல்வதுபோல் ஒரே மாதிரியான பிரதிநிதித்துவத்தை அளிக்கக் கூடாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் நல்வாழ்வுத் துறையில் மிகப் பெரிய வளர்ச்சியைக் கொண்ட மாநிலம். அதிகமான அளவில் அரசு, தனியார் மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம். அதிக அளவில் பிரதிநிதித்துவம் வேண்டும். More representations வேண்டும். Elected members representatives ஆக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் முதலில் nominate செய்வதாக இருந்தார்கள். அப்படியிருந்தால் Government of India-விலிருந்து யாரையாவது nominate செய்துவிடுவார்கள். இதற்கு தமிழ்நாட்டிலிருந்து elected member-ஐ அனுப்ப வேண்டும். Rotation-ல் அனுப்ப வேண்டும். எங்களுக்கு அதிக members வேண்டும். According to the population, according to the strength of the Medical Colleges and according to the strength of the Health Department பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதை மிகவும் அழுத்தமாகச் சொன்னோம்.

நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு மத்திய அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றேன். அதன் பிறகு, பாராளுமன்ற நிலைக் குழுவில் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்ததாலும், நாம் அது குறித்து நிறைய கடிதங்கள் எழுதியதையும் தொடர்ந்து, 'என்னென்ன ஷரத்துகள் நீக்க வேண்டும், என்னென்ன புதிய ஷரத்துகள் சேர்க்க வேண்டும் என்பதை ஒட்டுமொத்த இந்தியா முழுவதற்கும் நீங்களே சொல்லுங்கள்' என்று 1-2-2018 அன்றைய கடிதத்தின்மூலம் அவர்கள் நம்மை invite செய்தார்கள். அவர்களின் அழைப்பின்பேரில்,

2019 ஜூலை 19] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

13-2-2018 அன்று நம்முடைய அரசு செயலாளர் அங்கு நேரடியாகச் சென்று, பாராளுமன்ற நிலைக் குழு-Parliamentary Standing Committee முன்பு detailed representation கொடுத்திருக்கிறார்கள். 'எங்களுடைய நிலை இதுதான்; எங்கள் மாநிலத்தில் நீங்கள் சொன்னதுபோல், Madras Medical College மற்றும் Stanley Medical College போன்ற மிகப் பழம்பெரும் மருத்துவக் கல்லூரிகள் உள்ளன என்றும், எந்த நேரத்திலும் மாநிலத்தின் உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்றும் கூறினோம். மேலும், Bridge course வேண்டாம், நீங்கள் சொன்னதுபோல் NEXT Exam வேண்டாம், அப்படி NEXT Exam வைப்பதாக இருந்தால், foreign-லிருந்து படித்துவிட்டு வரக்கூடிய மாணவர்களுக்கு வையுங்கள், நம்முடைய அரசு சார்ந்த கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு இன்னொரு exam நிச்சயமாக வேண்டாம், வைக்கவே கூடாது' என்பதை நாம் உறுதிபடத் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் Cabinet-ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று முழு விவரம் வரவில்லை. இந்தக் கருத்தை நமது அரசு மிகவும் அழுத்தமாக பதிவுசெய்திருக்கிறது. அதே நிலையில் இருக்கிறோம். கடுமையாக அதை எதிர்க்கிறோம், வலியுறுத்துகிறோம், அதில் எந்தவித மாற்றுக் கருத்திற்கும் இடம் இல்லை.

முற்பகல் 11-20

நாம் சொன்ன ஷரத்துகளை எடுத்துவிட்டு, தற்போது அவர்கள் பல்வேறு புதிய ஷரத்துகளை சேர்த்துக்கொள்கிறார்கள். அவற்றில் குறிப்பாக பார்த்தீர்களானால், 'transparent admission, fees-ஐ குறைக்க வேண்டும் மற்றும் Bridge course தேவையில்லை' என்பதையெல்லாம் ஒத்துக்கொள்கிறார்கள். NEXT exam-ஐ பொறுத்தவரையில் மத்திய அரசிடம் clarification கேட்டிருக்கின்றோம். அதாவது foreign-லிருந்து படித்துவிட்டு வருபவர்களுக்கு மட்டும் exam வைப்பதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. M.B.B.S. மருத்துவர்களுக்கு exam வைக்கக் கூடாது. M.B.B.S. மருத்துவர்களுக்கு வைக்கக்கூடிய exam-ஐ instead of NEET, P.G. படிப்பவர்களுக்கு என்று சொல்லப்பட்டிருப்பதை நானும் பத்திரிகைகளில் படித்தேன். அதன் முழு விவரங்கள் வந்ததற்குப் பிறகு—இந்தக் கொள்கையில் அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.